# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 29 | 4 Pages | 30.08.2023 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 29 | 4 பக்கங்கள் | 30.08.2023 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## கொளத்தூர் தொகுதியில் முதலமைச்சர் இன்று ஆய்வு: மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிடுகிறார்

சென்னை,ஆக.30



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் உதவி ஆணையர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார். திரு. வி.க. நகர் பஸ் நிலையம் அருகில் நடைபெறும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்கிறார். கொளத்தூர் தொகுதிக்கு இன்று செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் உதவி ஆணையர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார். தொடர்ந்து நீர்வள ஆதாரத்துறையின் மூலம் தணிகாச்சலம் கால்வாயினை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணியையும் தொடங்கி வைக்கிறார்.

மேலும், மாநகராட்சி பூங்காவில் மழை நீர் அமைத்து சேகரிக்கும் மையம் மேம்படுத்தும் பணியை தொடங்கி வைப்பதோடு, திரு. வி.க. நகர் பஸ் நிலையம் அருகில் நடைபெறும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்கிறார். அதன் பிறகு மாணவ மாணவியருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

## அமெரிக்காவில் பல்கலைக்கழகத்தில் துப்பாக்கி சூடுபேராசிரியர் பலி

வாஷிங்டன்,ஆக.30



பேராசிரியர் குண்டு பாய்ந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியானார். கொலை நடந்த 3 மணி நேரத்தில் மர்ம நபரை போலீசார் கண்டுபிடித்து கைது செய்தனர். அமெரிக்காவில் சமீப காலமாக துப்பாக்கி சூடு சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. பள்ளி, கல்லூரிகள், பொது இடங்களில் துப்பாக்கிசூடுசம்பவங்கள்நடப்பதால்அப்பாவி மாணவர்கள், பொதுமக்கள் உயிரிழக்கும் பரிதாப நிலை ஏற்படுகிறது. இதனை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் துப்பாக்கி சூடு சம்பவங்கள் குறைந்த பாடில்லை. இந்த நிலையில் அமெரிக்காவின் வடக்கு கரோலினா பல்கலைக்கழகத்தில் உள்ள அறிவியல் கட்டிடத்தில் மர்ம நபர் ஒருவர் துப்பாக்கியுடன்நுழைந்தான்.அவன்அங்கிருந்தபேராசிரியரைதுப்பாக்கியால் சுட்டான். இதில் பேராசிரியர் குண்டு பாய்ந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியானார். பின்னர் மர்ம நபர் அங்கிருந்து தப்பி ஓடி விட்டான். இதையடுத்து துப்பாக்கி சூடு குறித்து தகவல் அறிந்ததும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். உயிரிழந்த பேராசிரியரின் உடலை கைப்பற்றி மருத்துவ மனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மர்ம நபர் குறித்து விசாரணை நடத்திய போலீசார் சி.சி.டி.வி. கேமரா காட்சிகளை ஆய்வு செய்து அவனை தீவிரமாக தேடினர். கொலை நடந்த 3 மணி நேரத்தில் மர்ம நபரை போலீசார் கண்டுபிடித்து கைது செய்தனர். அவன்மீது வழக்குப்பதிவு செய்துதுப்பாக்கி சூடு நடத்தியதற்கான காரணம் குறித்து விசாரித்து வருகின்றனர்.

## கலிபோர்னியா சட்டமன்றத்தில் சாதி பாகுபாடு எதிர்ப்பு சட்ட மசோதா நிறைவேற்றம்

அமெரிக்கா,ஆக.30



சாதி பாகுபாடு எதிர்ப்பு சட்ட மசோதாவை நிறைவேற்றிய முதல் அமெரிக்க மாநிலம் கவர்னர் ஒப்புதல் அளித்ததும் சட்டமாக செயல்படும் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில சட்டமன்றத்தில் சாதி பாகுபாடு எதிர்ப்பு சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. உள்ளூர் நேரப்படி நேற்று இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்து. சாதி பாகுபாட்டை எதிர்த்து மாநிலம் முழுவதும் குறைந்த எண்ணிக்கையில் உள்ள சமூகங்களுக்கான பாதுகாப்பை வலுப்படுத்த இந்த சட்ட மசோதா உதவியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா அம்மாநில கவர்னர் கவின்நியூசோமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர் ஒப்புதல் அளித்ததும், சட்டமாக்கப்படும். மசோதா நிறைவேற்றியதன் மூலம், சாதி பாகுபாடு எதிர்ப்பு மசோதாவை நிறைவேற்றிய முதல் அமெரிக்க மாநிலம் என்ற பெருமையை கலிபோர்னியா பெற்றுள்ளது. உறுப்பினர் ஆயிஷா வஹாப் அறிமுகப்படுத்திய இந்த மசோதாவிற்கு ஏராளமான சாதி சமத்துவ மக்கள் உரிமை ஆர்வலர்கள் மற்றும் அமைப்புகள் ஆதரவு அளித்துள்ளன. எஸ்.பி.403 சட்ட மசோதாவிற்கு ஆதரவு அளித்த அனைத்து உறுப்பினருக்கும் நன்றி தெரிவித்த வஹாப், நீண்ட காலமாக எதிர்கொள்ளும் பாகுபாட்டில் இருந்து மக்களை பாதுகாக்கிறோம் என்றார். அதேவேளையில் வட அமெரிக்கா இந்துகள் கூட்டணி (CoHNA) கலிபோர்னியா வரலாற்றில் இது ஒரு கருப்பு நாள் எனக் குறிப்பிட்டுள்ளது.

## படையெடுப்பு சதியை முறியடிக்க தயாராக இருக்கவும்: ராணுவத்தை வலியுறுத்திய வடகொரிய அதிபர்

வடகொரியா,ஆக.30




அமெரிக்கா தென்கொரியா கூட்டு ராணுவ பயிற்சியை மேற்கொண்டு வருகிறது அமெரிக்க அணு ஆயுத கப்பல்கள் தென்கொரியா கடற்பகுதியில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை செய்து வரும் நிலையில், தென்கொரியா தன்னை பாதுகாத்துக் கொள்ள அமெரிக்காவுடன் நட்பு வைத்துள்ளது. இதன் காரணமாக அமெரிக்க போர் கப்பல்கள் கொரிய தீபகற்பத்தில் கால் பதித்துள்ளன. மேலும், அமெரிக்கா தென்கொரிய ராணுவம் இணைந்து போர் பயிற்சியை கடந்த 21ந்தேதி தொடங்கியுள்ளது. இந்த போர் பயிற்சி 11 நாட்கள் நடைபெற இருக்கிறது. இது வடகொரியாவை கோபத்திற்குள்ளாக்கியது. இதனால் அடிக்கடி ஆயுத தொழிற்சாலைகளில் காணப்பட்ட வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன், நவீன ஆயுதங்களின் உற்பத்தியை அதிகரிக்க உத்தரவிட்டிருந்தார். இந்த நிலையில் அமெரிக்கா தென்கொரியா இணைந்து எப்போது வேண்டுமென்றாலும் வடகொரியா மீது போர் தொடுக்கலாம் என நினைக்கிறார். இதனால் அமெரிக்கா தலைமையிலான படையெடுப்பை முறியெடுக்க, தொடர்ந்து தயார் நிலையில் இருக்கும்படி வடகொரிய ராணுவத்தை கேட்டுக்கொண்டுள்ளார். கப்பல் படை தினம் நேற்று கொண்டாடப்பட்டது. அப்போது உரையாற்றிய கிம் ஜாங் உன், இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும், அமெரிக்கா தென்கொரியா ஜப்பான் உச்சி மாநாட்டினை தொடர்ந்து, அமெரிக்கா அணு ஆயுதம் தொடர்பான மூலோபாய சொத்துகளை (போர்க்கப்பல் உள்பட) குவித்து, பயிற்சியில் ஈடுபட்டு வருவதை குறிப்பிட்டார். இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது. சில தினங்களுக்கு முன் வடகொரியா, தனது உளவு செயற்கைக்கோளை 2வது முறையாக ஏவியது. பின்னர், இந்த முறையும் தோல்வியடைந்ததாக தெரிவித்திருந்தது.

## இந்தோனேசியாவின் பாலி கடல் பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.0 ஆக பதிவு

இந்தோனேசியா,ஆக.30



அமெரிக்க புவியியல் ஆய்வு மையத்தின்படி, ரிக்டர் அளவுகோலில் 7.1 ஆக பதிவாகியுள்ளது. கடலுக்கு அடியில்ஏற்பட்டநிலநடுக்கத்தின் விளைவாக சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை. இந்தோனேசியாவின் பாலி கடல் பகுதியில் இன்று அதிகாலை 7.0 ரிக்டர் அளவில் சக்சி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. பூகம்பத்தின் மையம் இந்தோனேசியாவின் மாதரத்திலிருந்து வடக்கே 201 கிலோமீட்டர் தொலைவிலும், பூமியின் மேற்பரப்பிலிருந்து 518 கிலோமீட்டர் (322 மைல்) கீழேயும் இருந்ததாகவும் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இதுவே, அமெரிக்க புவியியல் ஆய்வு மையத்தின்படி, ரிக்டர் அளவுகோலில் 7.1 ஆக பதிவாகியுள்ளது. இந்தோனேசியாவின் மேற்கு நுசா தெங்கரா, பங்சல் அருகே நிலநடுக்கத்தின் மையப்பகுதிக்கு அடியில் 525 கிமீ ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதற்கிடையில், கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் விளைவாக சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்று அமெரிக்க சுனாமி எச்சரிக்கை அமைப்பு தெரிவித்துள்ளது.

## வளர்ச்சி திட்டங்களில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது அமைச்சர் பெரியகருப்பன்

பல்லடம்,ஆக.30

முந்தைய அ.தி.மு.க. அரசு 10 ஆண்டுகளில் 6 லட்சம் கோடி ரூபாய் கடன் ஏற்படுத்தி கஜானாவை காலி செய்து விட்டு சென்றனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பல்வேறு நலத்திட்டங்களை மக்களுக்காக செயல்படுத்தி வருகிறார்.



திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தேர்தல் வாக்குறுதிகளில் 85 சதவீதத்தை நிறைவேற்றியுள்ளோம். முந்தைய அ.தி.மு.க. அரசு 10 ஆண்டுகளில் 6 லட்சம் கோடி ரூபாய் கடன் ஏற்படுத்தி கஜானாவை காலி செய்து விட்டு சென்றனர். அந்த இக்கட்டான சூழ்நிலையில், ஆட்சிக்குவந்துதனதுதிறமையானநிர்வாகத்தால், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மகளிர் உரிமை தொகை, பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு போன்ற பல்வேறு நலத்திட்டங்களை மக்களுக்காக செயல்படுத்தி வருகிறார். இந்தியாவிலேயே தமிழ்நாடு வளர்ச்சி திட்டங்களில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது. ரேஷன் கடைகளில் தேங்காய் எண்ணெய் விற்பனை செய்வது குறித்து விவசாயிகள் விடுத்த கோரிக்கை குறித்து உணவுத் துறை அமைச்சரும், வேளாண்மை துறை அமைச்சரும் பேசி வருகின்றனர். விரைவில் நல்ல தகவல் வரும். மகளிர் உரிமை தொகை திட்டத்தை அனைத்து மகளிருக்கும் வழங்குவது குறித்து முதலமைச்சர்தான் முடிவெடுப்பார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மாநில வாலிபால் அணிக்கு திருப்பூரில் இருந்து 6 பேர் தேர்வு

திருப்பூர்,ஆக.30

மாநில வாலிபால் தேர்வு அணிக்கான போட்டிகள் திருப்பூர் நஞ்சப்பா ஜெய்வாபாய் பள்ளி மைதானத்தில் நடந்தது. திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த 6 பேர் தேர்வாகினர். இந்திய பள்ளிகள் விளையாட்டு கூட்டமைப்பு (எஸ்.ஜி.எப்.ஐ.,) சார்பில் மாநில வாலிபால் தேர்வு அணிக்கான போட்டிகள் திருப்பூர் நஞ்சப்பா ஜெய்வாபாய் பள்ளி மைதானத்தில் நடந்தது. ஈரோடு, நீலகிரி, கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இருந்து மாணவர் பிரிவில் 330 பேரும், மாணவிகள் பிரிவில் 168 பேரும் பங்கேற்றனர். மாணவர் பிரிவில் 14, 17, 19 வயது பிரிவில் தலா 7 பேர் வீதம் 21 வீரர்களும், மாணவிகள் பிரிவில் தலா 7 பேர் வீதம் 21 வீராங்கனைகள் என 42 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இதில் திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த 6 பேர் தேர்வாகினர். மாணவர் 14 வயதில் திருப்பூரை சேர்ந்த திவாகர், தனுர்சஞ்சீவி, யஸ்வந்த், நவீன், கோவை பிரகதம், பிரகுணா, ஈரோடு ஸ்ரீகலையரசு, 17 வயது பிரிவில் திருப்பூர் ஸ்ரீ விஷ்ணு, ஈரோடு சிவனேஷ், நிஷாந்த், பரத்குமார், கோவை சின்னண்ணன், தரனேஷ், பிராஜித். 19 வயது பிரிவில் கஜேந்திரன், சஞ்சய், லிட்டில்ராஜ், விஷால்ஜேபா, சுயம்பு சஞ்சய், தனுதரன் (கோவை), திருப்பூர் இசைவாணன். மாணவிகள் 14 வயது பிரிவில் சாருநேத்ரா, ஹேமா ஸ்ரீ (திருப்பூர்), ராகஸ்ரீ, காசினி, ரிதன்யா, அங்கையற்கண்ணி (ஈரோடு), அனுஸ்ரீ (கோவை). 17 வயது பிரிவில் மதுமிதா, ரஞ்சிதா, தேசிகா, ஐஸ்வர்யா, யாழினி, கனிஷ்கா (ஈரோடு), பிரீத்தி (கோவை), 19 வயது பிரிவில் கோவை சரோஜினி, ஈரோடு ஸ்வேதா, அபி, அமிர்தா, கனிகா ஸ்ரீ, தான்யா, துளசி.

## தொழிலாளி தற்கொலை

பல்லடம்,ஆக.30

நைலான் கயிறு மூலம் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. செந்தில்குமார் தற்கொலைக்கான காரணம் குறித்து பல்லடம் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். பல்லடம் கொசவம்பாளையம் ரோடு பகுதியைச்சேர்ந்த சுப்பிரமணியம் என்பவரது மகன் செந்தில்குமார் (வயது 43) . இவர் தனது தாயார் அங்காத்தாளுடன் வசித்து வந்தார். இன்னும் திருமணம் ஆகவில்லை. இந்த நிலையில் நேற்று வீட்டில் தனியே இருந்த அவர் விட்டத்தில் நைலான் கயிறு மூலம் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. வெளியே சென்று இருந்த அவரது தாயார் வீடு திரும்பிய போது மகன் தூக்கில் தொங்குவதை கண்டு அதிர்ச்சி அடைந்து, அக்கம் பக்கம் உள்ளவர்கள் உதவியுடன் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு செந்தில்குமாரை பரிசோதித்த டாக்டர் ஏற்கனவே அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தார். இது குறித்து அங்காத்தாள் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து, செந்தில்குமார் தற்கொலைக்கான காரணம் குறித்து பல்லடம் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## காதல் விவகார மோதலில் தலைமறைவாக இருந்த வாலிபர் கைது

பல்லடம்,ஆக.30

சில நாட்களுக்கு முன் அந்தப் பெண் வீட்டில் இருந்து திடீரென காணாமல் போனார். செல்வகுமார் (வயது38) என்பவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். திருப்பூர் கல்லூரி சாலையை சேர்ந்த 23 வயது வாலிபரும், கோவில் வழி பகுதியைச் சேர்ந்த 22 வயது பெண்ணும் சமூக வலைத்தளங்கள் மூலம் பழகி வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் அந்தப் பெண் வீட்டில் இருந்து திடீரென காணாமல் போனார். இதையடுத்து அவரது பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் பெண்ணை தேடி வந்தனர். இந்த நிலையில் அவர்கள் இருவரும் பல்லடம் அருகே உள்ள அருள்புரத்தில் இருப்பதாக தகவல் கிடைத்தது. இதுகுறித்து பல்லடம் போலீசில் புகார் அளிக்கப்பட்டது. பெண்ணின் ஊர் நல்லூர் காவல் நிலையத்திற்கு உட்பட்டது என்பதால் அவர்கள் இருவரையும் நல்லூர் காவல் நிலையத்திற்கு போலீசார்



பாதுகாப்புடன் அனுப்பி வைத்தனர். பல்லடம் அருகே உள்ள அருள்புரம் அருகே அவர்கள் சென்று கொண்டிருந்தபோது அவர்களைப் பின்தொடர்ந்து பைக் மற்றும் 3 கார்களில் வந்த சுமார் பத்துக்கும் மேற்பட்டோர் அந்த ஆண் நண்பர், மற்றும் அவரது நண்பர்களை தாக்கியதாக கூறப்படுகிறது. இந்த தாக்குதலில் ஈடுபட்ட பல்லடம் அருகே உள்ள கள்ளிமேட்டைச் சேர்ந்த பாலசுப்பிரமணியன், கணபதிபாளையம் ஊராட்சி கள்ளிமேடு பகுதியைச் சேர்ந்த நடராஜ் என்பவர் மகன் ராமகிருஷ்ணன் (வயது29), அதே பகுதியைச் சேர்ந்த ராஜசேகரன் என்பவரது மகன் விக்னேஷ் (வயது24) ஆகியோர் கைது செய்து சிறையில் அடைக்கப்படுள்ளனர். இந்த நிலையில் நேற்று பல்லடம் பனப்பாளையம் பகுதியில் இன்ஸ்பெக்டர் மணிகண்டன் தலைமையிலான போலீசார் வாகனசோதனையில் இருந்த போது அந்தவழியாக வந்த தலைமறைவாக இருந்த பல்லடம் அருகே உள்ள உகாயனூர் பகுதியை சேர்ந்த தெய்வசிகாமணி என்பவரது மகன் செல்வகுமார் (வயது38) என்பவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## மகளிர் உரிமை திட்ட பயனாளிகள் தேர்வு செய்யும் பணி கலெக்டர் ஆய்வு

பல்லடம்,ஆக.30

மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான வழிகாட்டுதல் நெறிமுறைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. 2ம் கட்ட விண்ணப்ப பதிவு முகாம் ஆகஸ்ட் 5 ந்தேதி முதல் 16ந்தேதி வரையிலும் நடைபெற்றது. குடும்பத் தலைவிகளுக்கு மகளிர் உரிமை திட்டம் என்ற பெயரில் மாதம் ரூ. 1000 வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதன்படி மகளிர் உரிமைத்தொகை பெறுவதற்கான வழிகாட்டுதல் நெறிமுறைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இந்த வழிகாட்டு நெறிமுறைகளின்படி மகளிர் உரிமைத் தொகை திட்ட த்தின் கீழ் தகுதியான பயனாளிகளின் விவரங்க ளை தேர்ந்தெடுக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.



இதற்கிடையே மகளிர் உரிமை திட்டத்திற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்ததை சரி பார்க்கும் பணி குறித்து பல்லடம் அருகேயுள்ள கரைப்புதூர் ஊராட்சி குன்னா ங்கல்பாளையம் பகுதியில் திருப்பூர்மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் ஆய்வு செய்தார். மேலும் வீடு வீடாக சென்று விண்ணப்பித்தவர்களின் விவரங்களை சரிபார்த்தார்.

அப்போது மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், பல்லடம் தாசில்தார் ஜெய்சிங் சிவக்குமார், தலைமையிடத்து துணை தாசில்தார் சுப்பிரமணியம் உள்பட பலர் உடன் இருந்தனர். பின்னர் கலெக்டர் கிறிஸ்துராஜ் நிருபர்களிடம் கூறியதாவது:

திருப்பூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை செயல்படுத்து வதற்கு மாவட்ட நிர்வாகம் அனைத்து பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. மாவட்டத்தில் 8,18,344 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். 1135 ரேசன் கடைகள் உள்ள நிலையில் 1113 விண்ணப்ப பதிவு முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. முதற்கட்ட விண்ணப்ப பதிவு முகாம் கடந்த ஜூலை 24 ந்தேதி முதல் ஆகஸ்ட் 4 ந்தேதி வரையிலும், 2ம் கட்ட விண்ணப்ப பதிவு முகாம் ஆகஸ்ட் 5 ந்தேதி முதல் 16ந்தேதி வரையிலும் நடைபெற்றது.

தற்போது விண்ணப்பித்தவர்களின் உரிய பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் பணி நடக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# பல்லடம் அருகே மோட்டார் சைக்கிள் திருடிய 3 பேர் கைது

பல்லடம்,ஆக.30

சில மாதங்களுக்கு முன்பு புதிதாக ரூ. 1 லட்சம் மதிப்பிலான மோட்டார் சைக்கிளை வாங்கியுள்ளார். ஒரே மோட்டார் சைக்கிளில் வந்த 3 வாலிபர்களை பிடித்து விசாரணை செய்தனர். பல்லடம் அருகே உள்ள வெங்கடாபுரம் பகுதியில் வசிப்பவர் துரைப்பாண்டி. இவரது மகன் திருப்பதி, தனியார் நிறுவன ஊழியராக வேலை பார்த்து வருகிறார். இந்தநிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு புதிதாக ரூ. 1 லட்சம் மதிப்பிலான மோட்டார் சைக்கிளை வாங்கியுள்ளார். இந்த நிலையில சம்பவத்தன்று வீட்டின் முன்பு நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் காணாமல் போனது. பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. தனது மோட்டார் சைக்கிளை மர்ம நபர்கள் திருடி விட்டதாக பல்லடம் போலீஸ் நிலையத்தில் அவர் புகார் அளித்தார்.புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரணை செய்து வந்தனர். இந்த நிலையில் நேற்று பல்லடம் அருகே உள்ள சின்னக்கரை காவல் சோதனைச் சாவடியில், குற்றப்பிரிவு சப்இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் தலைமையிலான போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்தேகத்திற்கு இடமான வகையில் ஒரே மோட்டார் சைக்கிளில் வந்த 3 வாலிபர்களை பிடித்து விசாரணை மேற்கொண்ட போது, வெங்கடாபுரம் பகுதியைச் சேர்ந்த திருப்பதி என்பவரது மோட்டார் சைக்கிளை திருடியவர்கள் என்பதும் மேலும் அதே மோட்டார் சைக்கிளில் அவர்கள் வந்ததும் தெரிய வந்தது. மேலும் போலீசாரது விசாரணையில் அவர்கள் மதுரை மாவட்டம் பரவையை சேர்ந்த சரவணன் என்பவரது மகன் சபரிநாதன் (வயது 21), திண்டுக்கல் மாவட்டம் மீனாட்சி நாயக்கன்பட்டியைச் சேர்ந்த ராபர்ட் பீட்டர் என்பவர் மகன் இம்மானுவேல் செல்வராஜ் (வயது 20) , அவிநாசி வேலாயுதம்பாளையத்தை சேர்ந்த சண்முகசுந்தரம் என்பவரது மகன் நவீன்குமார் (வயது25) என்பதும் மூன்று பேரும் மோட்டார் சைக்கிளை திருடியதும் தெரியவந்தது. இதையடுத்து அவர்களை கைது செய்த போலீசார்மோட்டார்சைக்கிளை பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். இவர்களில் சபரிநாதன் என்பவர் மீது, திருட்டு வழிப்பறி உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

# பல்லடம் அருகே வீடு புகுந்து திருடிய 2 பேர் கைது

பல்லடம்,ஆக.30

ரொக்கம் ரூ.21,ஆயிரம் , வெள்ளி கொலுசு ஒரு ஜோடி, ஆகியவற்றை திருடிச் சென்றனர். வாலிபர்களை பிடித்து விசாரணை செய்த போது அவர்கள் இந்த திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. பல்லடம் அருகே உள்ள காமநாயக்கன்பாளையம் போலீஸ் நிலையத்திற்கு உட்பட்ட கரடிவாவி கிராமத்தைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி மகன் பொன்னுசாமி, ரேசன்கடை ஊழியராக வேலை பார்த்து வருகிறார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இவர் மற்றும் குடும்பத்தார் வெளியில் சென்ற போது, வீட்டுக்குள் புகுந்த மர்ம நபர்கள் வீட்டிலிருந்த ரொக்கம் ரூ.21,ஆயிரம் , வெள்ளி கொலுசு ஒரு ஜோடி, ஆகியவற்றை திருடிச் சென்றனர். இதே போல பொன்னுசாமி வீடு அருகே உள்ள வள்ளியம்மாள் (வயது 60) என்ற மூதாட்டி வீட்டிலிருந்த புதிய எல்.இ.டி. கலர் டிவி ஒன்றும் திருடப்பட்டது. இதுகுறித்து அவர்கள் இருவரும் காமநாயக்கன்பாளையம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். இந்த நிலையில் பல்லடம் செட்டிபாளையம் ரோட்டில் உள்ள கரடி வாவி சோதனை சாவடியில் காமநாயக்கன்பாளையம் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போது அந்த வழியே மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு வாலிபர்களை பிடித்து விசாரணை செய்த போது அவர்கள் இந்த திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. மேலும் போலீசார் விசாரணையில் அவர்கள் ஈரோடு மாவட்டம் கொடுமுடியைச் சேர்ந்த தங்கராஜ் என்பவரது மகன் மணிகண்டன் (வயது 32), தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த செல்லத்துரை மகன் முருகன் (வயது 37) என்பதும் தெரியவந்தது. இதையடுத்து அவர்களை கைது செய்த போலீசார் அவர்களிடமிருந்து ஒரு மோட்டார் சைக்கிள், வெள்ளி கொலுசு ஒரு ஜோடி, கலர் டிவி, ரூ.10 ஆயிரம் ரொக்கம் ஆகியவற்றை பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.


# பல்லடத்தில் எச்.வசந்தகுமார் நினைவுநாள் நிகழ்ச்சி



பல்லடம்,ஆக.30

காங்கிரஸ் கட்சி சார்பில் நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது வசந்தகுமாரின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது . முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செயல் தலைவரும், காங்கிரஸ் கமிட்டி வர்த்தக பிரிவு நிறுவன தலைவரும், முன்னாள் கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினருமான எச். வசந்தகுமாரின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பல்லடம் கடைவீதி சாலையில் காங்கிரஸ் கட்சி சார்பில் நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வசந்தகுமாரின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. பின்னர் அவரது நினைவை போற்றும் வகையில் ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. திருப்பூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் வர்த்தக பிரிவு மாவட்ட தலைவர் மணிராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே. பழனிவேல், பல்லடம் நகர காங்கிரஸ் தலைவர் ஈஸ்வரமூர்த்தி, வர்த்தக பிரிவு மாவட்ட துணை தலைவர் கிருஷ்ணகுமார் ஆகியோர் முன்னிலை வகித்ததனர். காங்கிரஸ் மகளிர் அணி சுந்தரி முருகேசன் வரவேற்றார்.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச்செயலாளர்நரேஷ் குமார், வர்த்தகப்பிரிவு பல்லடம் நகரத்தலைவர் சுரேஷ், பொங்கலூர் வட்டாரத்தலைவர் ராமச்சந்திரன், சிறுபான்மை பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர்சாகுல்அமீது மற்றும் அர்ஜுனன், கனகராஜ், சுரேஷ்குமார், பொங்கலூர் ராமு, சுரேஷ், பிரதீப், ராஜா, தமிழரசு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பல்லடம் கோவில்களில் பிரதோஷ வழிபாடு



பல்லடம்,ஆக.30

சிவலிங்கத்திற்கு அபிசேக பூஜை, சிறப்பு யாகம் ஆராதனை உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை வழிபட்டனர்.

பல்லடம் பட்டேல் வீதியில் உள்ள அருளானந்த ஈஸ்வரர் கோவிலில் பிரதோஷத்தை முன்னிட்டு சிவலிங்கத்திற்கு அபிசேக பூஜை, சிறப்பு யாகம் ஆராதனை உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதேபோல பல்லடம் அருகே உள்ள சித்தம்பலம் நவகிரக கோட்டையில் பிரதோஷத்தை முன்னிட்டு அம்மையப்பர் கோவில் திருவீதி உலா நடைபெற்றது.

காமாட்சிபுரம் ஆதீனம் சிவலிங்கேஸ்வர சுவாமிகள் சிறப்பு பூஜைகளை நடத்தி வைத்தார்.

இதேபோல பல்லடம் பொங்காளியம்மன் கோவில், சந்தைப்பேட்டை கோட்டைவிநாயகர் கோவில், மாதப்பூர் முத்துக்குமாரசாமி மலைக்கோவில், உள்ளிட்ட சிவாலயங்களில் பிரதோஷத்தை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை வழிபட்டனர்.

# கடனை திருப்பி செலுத்தாததால் தாராபுரத்தில் அரசு பள்ளி 'ஜப்தி' மாணவர்கள், பெற்றோர்கள் அதிர்ச்சி

தாராபுரம்,ஆக.30

கடந்த 10 வருடங்களாக இந்த வழக்கு நடைபெற்று வந்தது. கடனை திருப்பி செலுத்தாததால் அரசு உதவி பெறும் பள்ளி ஜப்தி செய்யப்பட்ட சம்பவம் தாராபுரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. திருப்பூர் மாவட்டம் தாராபுரம் போலீஸ் நிலையம் அருகேஅரசுஉதவிபெறும் ஆரம்பப்பள்ளி உள்ளது. இங்கு 20க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இந்தபள்ளிநிர்வாகத்தினர் தனியார்நிதி நிறுவனத்தில் கடன் வாங்கினர். இதற்காக பள்ளியின் இடத்தை ஈடாக கொடுத்து இருந்தனர். இந்தநிலையில் நீண்ட நாட்களாகியும் கடனை திருப்பி செலுத்தாததால் தனியார் நிதி நிறுவனத்தினர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். கடந்த 10 வருடங்களாக இந்த வழக்கு நடைபெற்று வந்தது.

கடனை திருப்பி செலுத்தக்கோரி ஐகோர்ட்டு பல முறை உத்தரவிட்டும் அதனை செலுத்தாததால் பள்ளி இடத்தை ஜப்தி செய்ய நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து கோர்ட்டு அமீனா தாராபுரம் வந்து பள்ளியை ஜப்தி செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டார். இதற்கு பள்ளி நிர்வாகத்தினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து தாராபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் மணிகண்டன் தலைமையிலான போலீசார் பாதுகாப்புடன் பள்ளி இடம் ஜப்தி செய்யப்பட்டது. இதனால் அங்கு படித்து வந்த மாணவர்கள் அதிர்ச்சியடைந்தனர். அவர்களின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளது.

அவர்களை அருகில் உள்ள பள்ளிகளில் கல்வி பயில்வதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என மாணவர்களின் பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். க்ஷகடனைதிருப்பி செலுத்தாததால் அரசு உதவி பெறும் பள்ளி ஜப்தி செய்யப்பட்ட சம்பவம் தாராபுரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# பழைய வீடுகளை இடித்துவிட்டு புதிய வீடுகள் கட்டும்போது அரசு நிபந்தனைகளை நீக்க வேண்டும் எடப்பாடி பழனிசாமி



சென்னை,ஆக.30

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நாகர்கோவில்மாநகரில்பொதுவாக குறுகிய சாலைகளும், 3 அடிக்கும் குறைவான தெருக்களும் அதிகம் உள்ளன. அத்தகைய இடங்களில் உள்ள பழைய கடைகள், வீடுகள் மற்றும் கட்டிடங்கள் இயற்கைச் சீற்றங்களி னால் இடிந்து விழும் சூழ்நிலையில் அவற்றை இடித்துவிட்டு புதிய கடைகள், வீடுகள் கட்ட மாநகராட்சி அனுமதி தருவதில்லை. மின் இணைப்பும் தருவதில்லை. இதனால் மக்கள் பெரிதும் அவதியுற்று வருகின்றனர். புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களுக்கு திட்ட ஒப்புதல் கிடைக்காமல் நிலுவையில் உள்ளன. எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் பழைய கட்டுமானங்களை இடித்துவிட்டு புதிய வீடுகள், கடைகள் ஆகியவற்றைக் கட்டுவதற்கு அனுமதியும், மின் இணைப்பும் வழங்குமாறு கேட்கின்றனர். மாநகராட்சி அதிகாரிகளிடம் விண்ணப்பதாரர்களும், மக்கள் பிரதிநிதிகளும் பலமுறை வலியுறுத்தியும் கிடைக்கவில்லை. அதனைத் தொடர்ந்து, 18.11.2022 அன்று நகர்ப்புற ஊரமைப்புத் துறை இயக்குநர், நாகர்கோவிலில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விரிவான ஆலோசனை நடத்தினார். பின்னர், நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதிகளில்உள்ளபழைய கட்டிடங்களை இடித்துவிட்டு புதிய கட்டிடங்களை கட்டுவதற்கு அனுமதி அளிப்பது குறித்து அரசுக்கு பரிந்துரைக்கப்படும். பின்னர், இதுமற்ற மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்றும் உறுதி அளித்தார். அவ்வாறு உறுதி அளிக்கப்பட்டு 5 மாதங்கள் கடந்த பின்னரும், மேல் நடவடிக்கை ஏதும் இல்லை. இதுபற்றி சட்டமன்றக் கூட்டத் தொடரில் 11.4.2023 அன்று, கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சரான, தளவாய் சுந்தரம் எம்.எல்.ஏ. கேள்வி எழுப்பினார். அ ப்போது பதில் அளித்துப் பேசிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க ப்படும் என உறுதி அளித்திருந்தார். உறுதி அளித்து 4 மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், இன்னும் நாகர்கோவில் மாநகராட்சி மக்களுக்கு விடிவு காலம் வரவில்லை. எனவே , நாகர்கோவில் மாநக ராட்சி மக்களை பாதிக்கின்ற வகையில் உள்ள திட்ட அனுமதி பிரச்சினைகளை சரிசெய்து, உடனடியாக கட்டிட அனுமதி மற்றும் மின் இணை ப்பு வழங்க விரிவான அரசாணையை வெளியிட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இந்த அரசாணை தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளுக்கும் பொருந்தும் படியான உத்தரவாக வெளியி ட்டு ஒரு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# அண்ணாமலை என்ன செய்து கொண்டிருக்கிறார்? காவிரி விவகாரத்தில் கே.எஸ்.அழகிரி குற்றச்சாட்டு



சென்னை,ஆக.30

வரைவு திட்டத்துக்கான ஒப்புதலையும் மத்திய அரசு வழங்கியது. பா.ஜனதா காவிரியை மையமாக வைத்து அரசியல் செய்கிறது.

தமிழகத்துக்கு கர்நாடக அரசு தர வேண்டிய காவிரி தண்ணீரை தர மறுக்கிறது. இது தொடர்பாக தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி கூறியதாவது: தமிழகத்தில் ஆளும் தி.மு.க. அரசைபா.ஜனதா எப்படி குறை சொல்கிறதோ அதே போல் கர்நாடகத்தில் ஆளும் காங்கிரஸ் அரசை அங்குள்ள பா. ஜனதா குறை சொல்கிறது. அவர்களுக்கு காவிரி முக்கியமல்ல.

அரசியல்தான்முக்கியம். காவிரியில்தண்ணீர்திறக்க கர்நாடக அரசு முன் வந்ததும் முதலில் எதிர்ப்பு தெரிவித்தது பொம்மை. அடுத்ததாக எடியூரப்பா. 3வதாக குமாரசாமி . ஆரம்பத்தில் தண்ணீர் திறக்க முடியாத சூழலில் இருக்கிறோம் என்று துணை முதல்மந்திரி சிவகுமார் கூறியதும் காங்கிரசாக இருந்தாலும் முதலில் கண்டனம் தெரிவித்தது தமிழக காங்கிரஸ்.

மேலும் இந்த விஷயத்தில் தமிழக அரசுக்கு துணை நிற்போம் என்ற அறிவித்தோம். ஆனால் இப்போது அங்குள்ள பா.ஜனதா தூயவர்கள் எதிர்ப்பதை தமிழக பா. ஜனதாகண்டிக்கவில்லை.

இந்த நிமிடம் வரைகண்டித்து ஒரு வார்த்தை கூட அண்ணாமலை பேசவில்லை. கடந்த முறை பா.ஜனதா ஆட்சியின் போது தான் மேகதாதுவில் அணை கட்ட ரூ.1000 கோடி ஒதுக்கினார்கள். வரைவு திட்டத்துக்கான ஒப்புதலையும் மத்திய அரசு வழங்கியது.

இப்போதும் காவிரியில் தண்ணீர் திறந்து விடக் கூடாது என்பதில் அந்த அரசு உறுதியாக இல்லை. ஆனால் தயங்குகிறது. இந்த தயக்கத்துக்கு காரணம் பா.ஜனதாவின் எதிர்ப்பு தான். பா.ஜனதா காவிரியை மையமாக வைத்து அரசியல் செய்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# தனியார் சேவைக்கு மாறும் வாடிக்கையாளர்கள் அரசு கேபிள் டி.வி.யின் தரம் உயர்த்தப்படுமா?

தாராபுரம்,ஆக.30

வாடிக்கையாளர்களான பொது மக்களை கடும் அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது வாடிக்கையாளர்களை தக்க வைக்க அரசு கேபிள்டி.வி.யின்தரத்தை உயர்த்த வேண்டும் என்றனர் .

மாதம் 70 ரூபாய்க்கு கேபிள் டிவி.,. இணைப்பை வழங்கும் வகையில் கடந்த 2007ம் ஆண்டு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி., நிறுவனம் தொடங்கப்பட்டது. இதன் மூலம் மாநிலம் முழுவதும் குறைந்த கட்டணத்தில் கேபிள் சேவை வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், தரமற்ற சேனல்கள் மற்றும் சிக்னல் பிரச்னைகளால் ஏராளமான ஆபரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷனில் இருந்து விலகி, தனியார் கேபிள் சேவைகளுக்கு மாறி வருகின்றனர். இதனால் பொதுமக்கள் மீண்டும் அதிக கட்டணம் செலுத்தி கேபிள் சேவையை பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். டாக் டிவி., மூலம் ரூ.180க்கு பெறப்பட்டு வந்த கேபிள் சேவைக்கு தற்போது ரூ.280 முதல் ரூ.300 வரை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து திருப்பூரை சேர்ந்த கேபிள் ஆபரேட்டர்கள் கூறும்போது, கடந்த சில மாதங்களாக அரசு கேபிள் டிவி., இணைப்புகளில் அடிக்கடி இடையூறு ஏற்பட்டு வருகிறது. இதனால் சிறப்பான சேவையை அளிக்க முடிவதில்லை. இது வாடிக்கையாளர்களான பொது மக்களை கடும் அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது. இதுபோன்ற பிரச்சினைகளை நாள்தோறும் சந்தித்து வருகிறோம். இது குறித்து தாசில்தார் அலுவலகத்தில் புகார் அளித்தால் விரைவில் இப்பிரச்சினை சரிசெய்யப்படும் என்று கூறுவார்கள். ஆனால், டிரான்ஸ்மிஷன் மறு இணைப்பு செய்யவே பல மணி நேரம் ஆகும். இதனால் 20 சதவீத வாடிக்கையாளர்கள் டிடிஎச்., மற்றும் தனியார் சேவைகளுக்கு மாறிவிட்டனர். நாங்கள் தொடர்ந்து டாக் டிவி., சேவையை நம்பியிருந்தால் எங்களுடைய மீதமுள்ள வாடிக்கை யாளர்களையும் இழக்கும் அபாயம் ஏற்படும்.

எனவே எங்களைப் போன்ற பலரும் டாக் டிவி.,யில் இருந்து தனியார் கேபிள் சேவைக்கு மாறி வருகிறோம். வாடிக்கையாளர்களை தக்க வைக்க அரசு கேபிள் டி.வி.யின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றனர். இது குறித்து தமிழக கேபிள் ஆபரேட்டர்சங்கமாவட்ட ஒருங்கிணைப்பாளர் தினேஷ் கூறியதாவது: அண்மைக்காலமாக தமிழ்நாடு அரசு கேபிள் டிவி சேவையின் நம்பகத்தன்மை குறைந்துவிட்டது. அரசு மூலம் ஹெச்டி செட் டாப் பாக்ஸ்கள் தரப்படுவதில்லை. இதனால் சாதாரண செட் டாப் பாக்ஸ்களே பல இடங்களில் பொருத்தப்பட்டு வருகின்றன.சிக்னல்பிரச்சினைகள் , தரமற்ற சேவை போன்றவற்றால் பொதுமக்கள் கடும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

இதனால், தற்போது டிடிஎச்., மற்றும் தனியார் சேவைகளுக்கு பொதுமக்கள் மாறிவருகின்றனர். கேபிள் டிவி ஆபரேட்டர்கள் வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வதற்காக வேறு வழியின்றி தனியார் கேபிள் சேவைகளுக்கு மாற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. டாக் டிவி சேவையைவிட சிறப்பான சேவையை தனியார் நிறுவனங்கள் அளிப்பதால் விலை சற்று அதிகமாக இருந்தாலும் பொது மக்களும் அதையே விரும்புகின்றனர்என்றார். அரசு கேபிள் டிவி சேவையில் இருந்து தனியார் சேவைக்கு அண்மையில் மாறியுள்ள இல்லத்தரசி ஒருவர் கூறும்போது, எங்களது வீட்டில் டாக் டிவி., சேவையையே பயன்படுத்தி வந்தோம். ஆனால் அது பல நேரங்களில் செயல்படாமல் இருந்தது. இது தொடர்பாக புகார் தெரிவித்து வந்தோம். இந்நிலையில் அண்மையில் எங்களது கேபிள் ஆபரேட்டர் டாக் டிவி செட் டாப் பாக்சை மாற்றிவிட்டு தனியார் செட் டாப் பாக்சை பொருத்தியிருக்கிறார். இதுவரைகேபிள்கட்டணமாக சில விருப்ப சேனல்களுடன் சேர்த்து ரூ.210 செலுத்தி வந்தோம். தனியார்செட்டாப்பாக்ஸுக்கு மாற்றியதில் இருந்து ரூ.280 செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அரசு சேவையையே நாங்கள் விரும்புகிறோம். ஆனால் அது தரமில்லாமல் உள்ளது.

தற்போது தனியார் சேவையில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் சேனல்களை பார்க்க முடிகிறது என்றார்.

# அனுப்பர்பாளையம்புதூரில் தேசிய தொழிலாளர் தின விழா பேரணி 17ந்தேதி நடக்கிறது

திருப்பூர்,ஆக.30

பாரதிய மஸ்தூர்சங்க நிர்வாகிகள் கூட்டம் நடந்தது செயல்தலைவர் செந்தில் முன்னிலை வகித்தார். திருப்பூர்மாவட்ட பாரதிய மஸ்தூர் சங்க நிர்வாகிகள் கூட்டம்நடந்தது.மாவட்ட தலைவர் பிரபு தலைமை வகித்தார். செயல்தலைவர் செந்தில் முன்னிலை வகித்தார். வருகிற 17 ந்தேதி திருப்பூர் அவிநாசி ரோடு, அனுப்பர்பாளையம் புதூரில் உள்ள கருப்பராயன் கோவில் அருகிலிருந்து, விஸ்வகர்மா ஜெயந்தி தேசிய தொழிலாளர் தின விழா பேரணி நடைபெற உள்ளது. தொடர்ந்து அன்று மாலை 6 மணிக்கு 15 வேலம்பாளையம் பஸ் நிறுத்தம் அருகே பொதுக்கூட்டம் நடைபெறும். இதில் 1,500க்கும் மேற்பட்டோர் பங்கேற்க வேண்டும். பொதுக்கூட்டம் குறித்து தெருமுனை பிரசாரம் செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### மருத்துவக்காப்பீட்டில் ஊழல்:
# உண்மை இருப்பதால்தான் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார் வைகோ

மதுரை ,ஆக.30

மத்திய தணிக்கை குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளபடி மருத்துவ காப்பீட்டில் ஊழல் நடந்துள்ளது. வருகிற செப்டம்பர் 15ந்தேதி மதுரையில் அண்ணா பிறந்த நாளையொட்டி மாநில மாநாடு நடத்த உள்ளோம்:

பேரறிஞர் அண்ணாவின் 115வது பிறந்த நாளையொட்டி, மதுரை வலையங்குளம் பகுதியில் வருகிற செப்டம்பர் 15ந்தேதி ம.தி.மு.க. சார்பில் மாநில மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாடு நடைபெறும் இடத்தை



பார்வையிட்டு ஆய்வு செய்வதற்காக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இன்று காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை வந்தார். பின்னர் விமான நிலையத்தில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: மத்திய தணிக்கை குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளபடி மருத்துவ காப்பீட்டில் ஊழல் நடந்துள்ளது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆதாரங்கள், அடிப்படை காரணங்கள் இல்லாமல் எதையும் கூறியிருக்க மாட்டார். இந்த குற்றச்சாட்டில் உண்மை இருப்பதால் தான் கூறியிருப்பார். வருகிற செப்டம்பர் 15ந்தேதி மதுரையில் அண்ணா பிறந்தநாளையொட்டி மாநில மாநாடு நடத்த உள்ளோம். அந்த இடத்தினை ஆய்வு செய்வதற்காகதான்தற்போது மதுரை வந்துள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

# காவிரி ஆற்றில் தண்ணீர் திறப்பு குறைப்பு: மேட்டூர் அணை நீர்மட்டம் 51.98 அடியாக குறைந்தது

சேலம்,ஆக.30

ஒகேனக்கல் காவிரியில் வரும் தண்ணீர் நேராக மேட்டூர் அணைக்கு வருகிறது. மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்பட அனைத்து அருவிகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. கர்நாடக மாநிலத்தில் உள்ள கிருஷ்ணராஜ சாகர் மற்றும் கபினி ஆகிய அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் திறந்து விடப்படும் நீரின் அளவு அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது. நேற்று கிருஷ்ணராஜசாகர் மற்றும்கபினி ஆகிய 2 அணைகளில் இருந்து வினாடிக்கு 4 ஆயிரத்து 295 கன அடி நீர் திறந்து விடப்பட்டது. இந்த நிலையில் கேரளா மற்றும் கர்நாடக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் கர்நாடகாவில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. கிருஷ்ண ராஜ சாகர் அணைக்கு 1,891 கன அடி நீர் வந்து



கொண்டிருக்கிறது. இந்த அணையில் நீர்மட்டம் 101.82 அடியாக உள்ளது. அதுபோல் கபினி அணைக்கு 1,630 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இந்த அணையில் நீர்மட்டம் 73.77 அடியாக உள்ளது. இந்த 2 அணைகளில் இருந்தும் இன்று நீர் திறப்பு சற்று குறைக்கப்பட்டுள்ளது. அதாவது கிருஷ்ணராஜசாகர்அணையில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரத்து 293 கன அடி நீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. அதேபோல் கபினி அணையில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்த 2 அணைகளில் இருந்தும் 4 ஆயிரத்து 293 கன அடி நீர் தமிழகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இந்த நீர்வரத்தை தமிழககர்நாடக மாநில எல்லையான பிலிகுண்டுவில் மத்திய நீர்வள ஆணைய அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். ஒகேனக்கல்லில் நேற்று முன்தினம் 5 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று 6 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. இதனால் அங்குள்ள மெயின் அருவி, ஐந்தருவி, சினி பால்ஸ் உள்பட அனைத்து அருவிகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. ஒகேனக்கல் காவிரியில் வரும்தண்ணீர்நேராக மேட்டூர்அணைக்கு வருகிறது. மேட்டூர் அணைக்கு நேற்று காலை வினாடிக்கு 1,024கனஅடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை மேலும் அதிகரித்து 2,031 கனஅடியாக வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து காவிரியில் டெல்டா பாசனத்திற்காக 8 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணைக்கு வரும் தண்ணீரை விட அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறந்து விடப்படுவதால் அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. நேற்று 52.78 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் இன்று மேலும் சரிந்து 51.98 அடியானது. இனி வரும் நாட்களில் இதே நிலை நீடித்ததால் மேட்டூர் அணை நீர்மட்டம் மேலும் வேகமாக சரிய வாய்ப்புள்ளது.

# நாகர்கோவிலில் ஸ்குருடிரைவரால் குத்தி வாலிபர் கொலை நண்பர் கைது

நாகர்கோவில்,ஆக.30

கடந்த சில நாட்களுக்கு முன்பு பேச்சிக்கும், மனோஜ்குமாருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. மனோஜ்குமார் படுகாயம் அடைந்தார். ரத்தம் கொட்டிய நிலையில் மயங்கி விழுந்தார். நாகர்கோவில் கிருஷ்ணன் கோவில் கைலாஷ் கார்டன் முதல் தெருவை சேர்ந்தவர் மனோஜ்குமார் (வயது 22). இவரும், கிருஷ்ண ன்கோவில் தெப்பக்குளம் வடக்கு தெருவை சேர்ந்தவர் பேச்சி என்ற இசக்கிமுத்து (23) என்பவரும் நண்பர்கள் ஆவார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பு பேச்சிக்கும், மனோஜ்குமாருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதனால் இவர்களுக்கிடையே முன்விரோதம் இருந்து வந்தது. இந்தநிலையில் நேற்று இரவு மனோஜ்குமார் கிருஷ்ணன் கோவில் வடக்கு ரத வீதி தெப்பக்குளம் பகுதியில் நின்று கொண்டிருந்தார். அப்போது பேச்சி அங்கு வந்துள்ளார். இருவருக்கும் இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த பேச்சி மறைத்து வைத்திருந்த ஸ்குருடி ரைவரால் கழுத்து மற்றும் நெஞ்சில் மனோஜ்குமாரை சரமாரியாக குத்தினார். இதில் மனோஜ்குமார் படுகாயம் அடைந்தார். ரத்தம் கொட்டிய நிலையில் மயங்கி விழுந்தார். இதையடுத்து பேச்சி அங்கிருந்து சென்று விட்டார். அப்போது மனோஜ்குமாரின் மற்றொரு நண்பர் அங்கு வந்துள்ளார். மயங்கிய நிலையில் கிடந்த மனோஜ்குமாரை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார். நாகர்கோவில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் மனோஜ்குமாரை அனுமதித்தார். மனோஜ்குமார் விபத்தில் சிக்கி காயம் அடைந்ததாக அவரது நண்பர் டாக்டர்களிடம் கூறினார். மனோஜை பரிசோதித்த டாக்டர்கள் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தனர். அப்போது மனோஜ்குமாரின் உடலில் குத்து காயங்கள் இருந்ததை பார்த்து டாக்டர்கள்அதிர்ச்சி அடைந்தனர். இது தொடர்பாக போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். வடசேரி



போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டனர். மனோஜ்குமார் நண்பர்களிடம் விசாரணை நடத்திய போது அவர் முன்னுக்கு பின் முரணான தகவலை தெரிவித்தார். தனக்கும், இதற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றும் தனது நண்பர் மயங்கி கிடந்ததால் அவரை சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்த்ததாகவும் கூறினார். அப்போது மனோஜ்குமாரை குத்தியது யார் என்பது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்ட போது பேச்சி என்ற இசக்கி முத்து , மனோஜ்குமாரை குத்தியது தெரியவந்தது. போலீசார் அவரை பிடித்தனர். அவரிடம் விசாரணை நடத்தியபோது பேச்சி ஸ்குருடிரைவரால் மனோஜ் குமாரை குத்தியதை ஒப்புக்கொண்டார். இதையடுத்து போலீசார் பேச்சியை விசாரணை க்காக வடசேரி போலீஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். இந்த நிலையில் சிகிச்சையில் இருந்த மனோஜ்குமார் பரிதாபமாக இறந்தார். இதையடுத்து அவரது சகோதரர் ராஜ கோபால் கொடுத்த புகாரின் பேரில் மீது பேச்சி மீது கொலை வழக்குப்பதிவு செய்து போலீசார் அவரை கைது செய்தனர். பலியான மனோஜ்குமார் உடல் பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டது. அவரது உடல் பிரேத பரிசோதனை இன்று நடக்கிறது. இதையடுத்து ஆசாரிப்பள்ளம் ஆஸ்பத்திரியில் ஏராளமானோர் குவிந்திருந்தனர். கைது செய்யப்பட்ட பேச்சியை போலீசார் விசாரணைக்கு பிறகு கோர்ட்டில் ஆஜர்படுத்த நடவடிக்கைமேற்கொண்டு வருகிறார்கள். மனோஜ்குமார் வெளிநாடு செல்ல தயாராக இருந்த நிலையில் கொலை செய்யப்பட்ட சம்பவம் வடசேரியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மதுரை ரெயில் தீ விபத்து: பாதுகாப்பு குறித்து கண்காணிக்க தவறிய 45 அதிகாரிகளுக்கு சம்மன் அனுப்ப முடிவு

மதுரை,ஆக.30

தீ விபத்து ஏற்பட்ட ரெயில் பெட்டியை தடயவியல் நிபுணர்கள் 2 முறை சோதனை நடத்தினர். சட்ட விரோதமாக சிலிண்டரில் கியாஸ் நிரப்பியுள்ளனர். உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் இருந்து சிறப்பு சுற்றுலா ரெயில் பெட்டி மூலம் 63 பயணிகள்கடந்த 17ந்தேதி ஆன்மீக சுற்றுலா புறப்பட்டனர். கர்நாடகா, ஆந்திரா, கேரள மாநிலங்களில் உள்ள கோவில்களுக்கு சென்றுவிட்டு கடந்த 26ந்தேதி அதிகாலை மதுரை வந்தனர். அவர்கள் பயணித்த ரெயில் பெட்டி மதுரை ஜங்ஷன் ரெயில் நிலையத்தில் இருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் போடி லைனில் நிறுத்த ப்பட்டிருந் தது. அதிகாலை 5.15 மணிக்கு அந்த ரெயில் பெட்டியில் டீ போடுவதற்காக கியாஸ் சிலிண்டரை பயன்படுத்திபோது பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 9 பேர் பலியானார்கள். பலத்த காயம் அடைந்த 8 பேர் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்



பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். இதற்கிடையே தீ விபத்து ஏற்பட்ட ரெயில் பெட்டியை தடயவியல் நிபுணர்கள் 2 முறை சோதனை நடத்தினர். அப்போது அதில் வைக்கப்பட்டிருந்த எளிதில் தீப்பற்றக்கூடிய 2 சிலிண்டர்கள், விறகு, நிலக்கரி, மண்ணெண்ணை பாட்டில் ஆகியவை இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது. இந்த சம்பவத்தில் முறையான விதிகளை பின்பற்றாமல் ஏற்பாடு செய்த லக்னோ சீதாப்பூரை சேர்ந்த பேசின் என்ற டிராவல்ஸ் நிறுவனத்தின் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அதன் உரிமையாளரை கைது செய்யவும் தெற்கு ரெயில்வே பரிந்துரைத்துள்ளது. இந்நிலையில், டிராவல்ஸ் நிறுவன ஒருங்கிணைப்பாளரும், சுற்றுலா வழிகாட்டியுமான நரேந்திரகுமார், சமையல் பணியாளர் ஹர் தீப் சஹானி, சுற்றுலா உதவியாளர் தீபக், சமையல் உதவியாளர்கள் சத்ய பிரகாஷ் ரஸ்தோகி, கபம் கஸ்யப் ஆகிய 5 பேரை போலீசார் கைது செய்தனர் அவர்கள் மீது 3 பிரிவுகளின் கீழ் ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இந்நிலையில் பெங்களூருவில் இருந்து வந்திருந்த ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம்.சவுத்ரி மதுரையில் 2 நாட்கள் விசாரணை நடத்தினார். அப் போது ரெயில்வே பாதுகாப்பு படையினர், தமிழக ரெயில்வே போலீசார், வர்த்தக பிரிவை சேர்ந்தவர் கள், சுற்றுலா ரெயில் பெட்டியை சோதனை நடத்த வேண்டிய கேட்டரிங் ஆய்வாளர்கள், டிக்கெட் பரிசோதகர்கள், அதிகாரிகள்,அலுவலர்களிடம் அடுக்கடுக்கான கேள்விகளை கேட்டார். பின்னர் அவர் கூறுகையில், நாகர் கோவிலுக்கு இந்த சுற்றுலா ரெயில் சென்ற போது, அங்கு சட்டவிரோதமாகசிலிண்டரில்கியாஸ் நிரப்பியுள்ளனர். அப் போது முதலே அதில் கியாஸ் கசிவு இருந்துள்ளது. அதுவே விபத்துக்கு காரணமாக இருந்துள்ளது என்றார். தொடர்ந்து பாதுகாப்பு விதிமுறைகளை கண்காணிக்க தவறியதாக அதிகாரிகள் உள்பட 40க்கும் மேற்பட்டோர் விசாரணைக்கு ஆஜராகுமாறு சம்மன் அனுப்ப தெற்கு ரெயில்வே முடிவு செய்துள்ளது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்கும் என்று ரெயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# சேலம் அருகே மதுபோதையில் தனது வீட்டிற்கு தானே தீ வைத்த டிரைவர்

சேலம்,ஆக.30

தனியாக வசித்து வந்த தமிழரசன், மதுபோதையில் தான் குடியிருந்த வீட்டுக்கு தானே தீ வைத்தார். வீட்டில் இருந்த பீரோ, பிரிட்ஜ் உள்ளிட்ட பொருட்கள் தீயில் எரிந்து சேதமானது.

சேலம் மாட்டம் மல்லூர் பேரூராட்டசி கணபதி நகர் பகுதியை சேர்ந்தவர் தமிழர



சன் (வயது 33). இவருடைய மனைவி நந்தினி. இந்த தம்பதிக்கு 3 குழந்தைகள் உள்ளனர். தமிழரசனுக்கு மது குடிக்கும் பழக்கம் இருந்துள்ளது. இதனால் நந்தினி, கணவருடன் கோபித்துக் கொண்டு குழந்தைகளை அழைத்துக் கொண்டு பெற்றோர் வீட்டு க்கு சென்றுவிட்டார். இதனால் தனியாக வசித்து வந்த தமிழரசன், மதுபோதையில் தான் குடியிருந்த வீட்டுக்கு தானே தீ வைத்தார். இதில் வீட்டில் இருந்த பீரோ, பிரிட்ஜ் உள்ளிட்ட பொருட்கள் தீயில் எரிந்து சேதமானது. இதை கண்ட அக்கம் பக்கத்தினர் தண்ணீரை ஊற்றி தீயை அணைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக மல்லூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திண்டுக்கல்லில் ஓணம் பண்டிகை கொண்டாடிய மலையாள குடும்பத்தினர்

திண்டுக்கல்,ஆக.30

திண்டுக்கல்லில் வசித்து வரும் தமிழக வாழ்வு கேரளா மக்கள் இன்று ஓணம் பண்டிகையை சிறப்பாக கொண்டாடினர். பால கிருஷ்ணாபுரம் விஸ்தரிப்பு பகுதி சர்வேயர் நகரில் கேரளாவைச் சேர்ந்த தம்பதியினர், ஓணம் பண்டிகையை முன்னிட்டு வீட்டு வாசலில் அத்தப்பூ கோல மிட்டு மகாபலி சக்கரவர்த்தியை வரவேற்றனர்.



கேரளாவில் பிரசித்தி பெற்ற பண்டிகைகளுள் ஒன்று ஓணம் பண்டிகை. பண்டிகை நாளன்று மக்கள் வீட்டின் முன்பு பலவகை வண்ண பூக்களை கொண்டு அத்தப்பூ கோலமிடுவர்.

புத்தாடை அணிந்து, 10க்கும் மேற்பட்ட உணவு வகைகளை சமைத்து அக்கம் பக்கத்தில் உள்ள உறவினர்கள், நண்பர்களுக்கு விருந்தளித்து கொண்டாடி மகிழ்வர்.

ஓணம் பண்டிகை கேரள மாநிலம் மட்டுமின்றி தேனி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி போன்ற கேரள எல்லையை ஒட்டியுள்ள தமிழக மாவட்டங்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி திண்டுக்கல்லில் வசித்து வரும் தமிழக வாழ்வு கேரளா மக்கள் இன்று ஓணம் பண்டிகையை சிறப்பாக கொண்டாடினர். பால கிருஷ்ணாபுரம் விஸ்தரிப்பு பகுதி சர்வேயர் நகரில் கேரளாவைச் சேர்ந்த செந்தில் பினு தம்பதியினர், ஓணம் பண்டிகையை முன்னிட்டு வீட்டு வாசலில் அத்தப்பூ கோல மிட்டு மகாபலி சக்கரவர்த்தியை வரவேற்றனர். 10 நாட்களாக வீட்டு வாசலில் மலர்களால் கோலமிட்டு வந்தனர்.

இன்று பவள மல்லி, தாமரை, வாடாமல்லி, டோரியா, சம்பங்கி உள்ளிட்ட 9 வகையான பூக்கள் கொண்டு 10 அடுக்கு வரிசையில் அத்தப்பூ கோல மிட்டு உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர். மேலும் உறவினர்களுடன் பருப்பு, பால் பாயசம்,அப்பளம், இஷ்டு, அவியல், ஓலன், காலன், புளி இஞ்சி உள்ளிட்ட 12 வகையானஉணவு பதார்த்தங்கள்உடன்மகிழ்ச்சியாக கொண்டாடினர்.

# திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் ரூ. 44.90 லட்சம் செலவில் மாநில திட்டப்பணிகள் தீவிரம்

மாமல்லபுரம்,ஆக.30

பணிகளை பேரூராட்சி தலைவர் யுவராஜ் நேரில் ஆய்வு செய்தார். நிர்வாகிகள் இளங்கோ, சரவணன் சுரேஷ் கவுன்சிலர்கள் விஜயகுமார், தனசேகர் கோபி ஆகியோர் உடனிருந்தனர். திருக்கழுக்குன்றம் பேரூராட்சி 16வது வார்டு எம்.என் குப்பம் பகுதியில் பொது நிதி ரூ.12.10 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட உள்ள சிமெண்ட் சாலை, 15வது வார்டு பரமசிவம் நகர் பொதுநிதி



ரூ.8 லட்சம் மதிப்பில் சாஸ்திரி தெரு மழைநீர் வடிகால்வாய், 4வது வார்டு அன்னைசத்யாநகர் பொது நிதி ரூ.12.75 லட்சம் மதிப்பில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நமக்கு நாமே திட்டத்தில் அன்னை சத்யா நகரில் ரூ.12.5 லட்சம் மதிப்பில் சிறுபாலமும், சாலையும் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

பணிகளை பேரூராட்சி தலைவர் யுவராஜ் நேரில் ஆய்வு செய்தார். நிர்வாகிகள் இளங்கோ, சரவணன் சுரேஷ் கவுன்சிலர்கள் விஜயகுமார், தனசேகர் கோபி ஆகியோர் உடனிருந்தனர்.

# இளம்பெண் தற்கொலை முயற்சி: திருமணத்துக்கு மறுத்த கள்ளக்காதலன் கைது

சேலம்,ஆக.30

கோபால் திருமணம் செய்ய மறுத்து தட்டிக்கழித்து வந்தார். மனம் உடைந்த காதலி விஷ மருந்தை தின்று தற்கொலைக்கு முயன்றார். சேலம் மாவட்டம் மல்லூர் அருகே அக்கரைபாளையம் கிராமத்தை சேர்ந்த இளம்பெண் (வயது 23) தனது கணவரை பிரிந்து தன்னுடைய 3 வயது ஆண் குழந்தையுடன் தந்தை வீட்டில் வசித்து வருகிறார். இப்பெண்ணுக்கும், பாலம்பட்டி பகுதியை சேர்ந்த தேங்காய் வியாபாரி கோபால் (33) என்பவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த பழக்கம் நாளடைவில் காதலாக மாறி அவர்களுக்கு இடையே ரகசிய உறவு ஏற்பட்டது. இதையடுத்து கோபால் திருமணம் செய்ய மறுத்து தட்டிக்கழித்து வந்தார்.

சம்பவத்தன்று இரவு கோபால் தனது தோட்டத்து வீட்டில் இருந்தார். அங்கு சென்ற காதலி தன்னை திருமணம் செய்து கொள்ளும் படி கோபாலிடம் வற்புறுத்தி உள்ளார். கோபால் மறுக்கவே அவருடன் காதலி தகராறு செய்ததாக கூறப்படுகிறது. அப்படி இருந்தும் கோபால் தன்னுடைய நிலையில் பிடிவாதமாக இருந்தார். இதில் மனம் உடைந்த காதலி விஷ மருந்தை தின்று தற்கொலைக்கு முயன்றார். இதைக்கண்ட அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆஸ்பத்திரியில் அந்த பெண்ணுக்குதீவிரசிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து மல்லூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து கோபாலை கைது செய்து விசாரணை நடத்தினர்.

இதையடுத்து போலீசார், அவரை அழைத்துச்சென்று சேலம் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சேலம் மத்திய ஜெயிலில் அடைத்தனர். கள்ளக் காதலன் திருமணத்துக்கு மறுத்ததால் பெண் தற்கொலைக்கு முயன்ற சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# நத்தத்தில் 40 ஆண்டுகளுக்கு பின் சந்தித்த முன்னாள் மாணவர்கள்

நத்தம்,.ஆக.30

கடந்த 198284ம் ஆண்டுகளில் 11, 12ம் வகுப்புகளில் படித்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது இதில் 40 வருடங்களுக்கு பிறகு முன்னாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சந்தித்து கொண்டதால் ஒருவருக்கொருவர் தங்களது பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.: திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் துரைக்கமலம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு கடந்த 1982 84ம் ஆண்டுகளில் 11,



12ம் வகுப்புகளில் படித்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது. இதில் 40 வருடங்களுக்கு பிறகு முன்னாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சந்தித்து கொண்டதால் ஒருவருக்கொருவர் தங்களது பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து பள்ளி வளாகத்தை பார்வையிட்ட முன்னாள் மாணவர்கள் பின்னர் புகைப்படம் எடுத்து கொண்டனர். முன்னதாக பள்ளி வளாகத்தில் உள்ள துரைசாமி பிள்ளை சிலைக்கு முன்னாள் மாணவர்கள் மரியாதை செலுத்தினர். தொடர்ந்து பள்ளிக்கு மாணவர்கள் அமரும் இருக்கைகள் வழங்கபட்டது. இதில் சென்னை மாநகர உதவி காவல் ஆணையர் ராஜசேகர்,பள்ளியின் தலைமை ஆசிரியர் பால்சாமி உள்ளிட்ட ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## திடீரென முத்தமிட்ட இயக்குனர்.. பதறாமல் சிரித்த நடிகை

ஏ.எஸ். ரவிகுமார் சவுத்ரி இயக்கத்தில் ராஜ் தருண் கதாநாயகனாக நடிக்கும் திரைப்படம் 'திரகபாதர சாமி'. இப்படத்தின் டீசரை தயாரிப்பாளர் தில் ராஜு வெளியிட்டார். இயக்குனர் ஏ.எஸ். ரவிகுமார் சவுத்ரி இயக்கத்தில் ராஜ் தருண் கதாநாயகனாக நடிக்கும் திரைப்படம் 'திரகபாதர சாமி'. இந்த படத்தில் ராஜ் தருணுக்கு ஜோடியாக மன்னரா சோப்ரா நடித்துள்ளார். இப்படத்தின் டீசர் வெளியீட்டு



விழா சமீபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட தயாரிப்பாளர் தில் ராஜு இந்த டீசரை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில் படக்குழுவினர் புகைப்படம் எடுத்துக் கொள்ளும் போது நடிகை மன்னரா சோப்ரா பக்கத்தில் இயக்குனர் ஏ.எஸ். ரவிகுமார் சவுத்ரி நின்று கொண்டிருந்தார். அப்போது அனைவரின் முன்பாக இயக்குனர் திடீரென நடிகைக்கு முத்தமிட்டார். இதனை சிறிதும் எதிர்பாராத நடிகை பதறி போனார். இந்த புகைப்படம் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

## ரஜினியால் முட்டிக்கொண்ட சீமான் ராகவா லாரன்ஸ்.. ஒரு வழியாக முடிவுக்கு வந்த சண்டை

நெல்சன் இயக்கத்தில் 'ஜெயிலர்' திரைப்படத்தில் நடித்த ரஜினி இப்படம் வெளியாகுவதற்கு முந்தைய நாள் இமயமலைக்கு ஆன்மிக பயணம் சென்றார். இந்த பயணத்தின் போது பல அரசியல் தலைவர்களை சந்தித்த ரஜினி உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தை சந்தித்து அவரது காலில் விழுந்து வணங்கினார். இந்த புகைப்படம் சமூக வலைதளத்தில் வைரலானதைத் தொடர்ந்து பலரும் ரஜினிக்கு எதிராக விமர்சனம் செய்து வந்தனர். இந்நிலையில், இது தொடர்பாக சீமானிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு, "யோகி ஆதித்யநாத் காலில் ரஜினிகாந்த் விழுந்தது அவரது சொந்த விருப்பம். ரஜினிகாந்த் காலில் விழுந்துவிட்டதாலே வெங்காய விலை ஏறிவிட்டதா?" என ஆதரவு தெரிவித்திருந்தார். ரஜினி யோகி ஆதித்யநாத் இந்த வீடியோவை தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள



நடிகர்ராகவாலாரன்ஸ்,சீமானைபுகழ்ந்துபதிவிட்டுள்ளார். அதில், "சீமானுக்கு என் மனமார்ந்த நன்றிகள். நீங்கள் தலைவருக்கு எதிராக பேசும்போது நான் உங்களுக்கு எதிராக பேசியுள்ளேன். ஆனால் இப்போது நீங்கள் அன்புடன் பேசியுள்ளீர்கள்.

அதே அன்புடன் நானும் உங்களை விரைவில் சந்திக்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்பு சீமான், நடிகர் ரஜினியை குறித்து சர்ச்சை கருத்துகளை தெரிவித்தபோது நடிகர் ராகவா லாரன்ஸ், சீமானுக்குஎதிராகபேசியுள்ளார்என்பதுகுறிப்பிடத்தக்கது.



## விலைமதிப்பற்ற நினைவுகளை எனக்கு பரிசளித்த ரஜினி அப்பாவுக்கு நன்றி வசந்த் ரவி நெகிழ்ச்சி

நடிகர் ரஜினி நடிப்பில் வெளியான திரைப்படம் 'ஜெயிலர்'. இப்படம் ரசிகர்கள் மத்தியில்நல்லவரவேற்பைபெற்றது.மேலும்படிக்கஇயக்குனர்நெல்சன்திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிப்பில் ஆகஸ்ட் 10ஆம் தேதி வெளியான திரைப்படம் 'ஜெயிலர்'. இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று ரூ.525 கோடிக்கு மேல் வசூல் செய்துள்ளது. இப்படம் நடிகர் வசந்த் ரவிக்கு மிகப்பெரிய மையில் கல்லாக அமைந்துள்ளது. இந்நிலையில், நடிகர் வசந்த் ரவி, 'ஜெயிலர்' திரைப்படத்தில் நடித்தது குறித்து நெகிழ்ச்சியாக பதிவிட்டுள்ளார். அதில், 'ஜெயிலர்' எனது சினிமா பயணத்தில் மிக முக்கியமான மைல் கற்களில் ஒன்றாக மாறியுள்ளது. நான் இத்தனை வருடங்களாக இந்த துறையில் கற்ற முழு அர்ப்பணிப்பு, பொறுமை மற்றும் உறுதி ஆகியவற்றிற்கு இந்தப் படம் அங்கீகாரம் கொடுத்து, என்னை இன்னும் ஒரு படி மேலே உயர்த்தியுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது!! ஆகஸ்ட் 11, 2017 அன்று, இயக்குநர் ராம் சார் என்னை பிரபுநாத் என 'தரமணி' திரைப்படத்தில் அறிமுகப்படுத்தியதில் இருந்து, ஆகஸ்ட் 10, 2023 அன்று, ஜெயிலர்' படத்தில் நடிகர் ரஜினிகாந்த் சாரின் மகன் அர்ஜுன் முத்துவேல் பாண்டியன் கதாபாத்திரத்தில் அடியெடுத்து



வைத்தது என இவை அனைத்தும் இந்த பிரபஞ்சம் எனக்கு கொடுத்த விலைமதிப்பில்லாத பரிசாகவே நான் பார்க்கிறேன். என் மீது நம்பிக்கை வைத்து வாய்ப்பு கொடுத்த இயக்குநர் நெல்சன் திலீப்குமார் சாருக்கு எனது மனமார்ந்த நன்றி. எனது சினிமா பயணத்தின் தொடக்கத்தில் இருந்தே இடைவிடாத ஊக்கம் மற்றும் ஆதரவை அளித்த 'தலைவர்' ரஜினிகாந்த் (அப்பா) சாருக்கு முழு மனதுடன் நன்றி கூறுகிறேன். விலைமதிப்பற்ற நினைவுகளை எனக்கு பரிசளித்த ரஜினி அப்பாவுக்கு மீண்டும் எனது மனப்பூர்வமான நன்றிகள். படப்பிடிப்பில் அவருடன் கழித்த ஒவ்வொரு நொடியும் என் வாழ்வில் அழியாத நினைவாக என் நெஞ்சில் இருக்கும். அவர் சொன்ன விஷயங்கள் எனது நடிப்புத் திறனை மட்டுமல்ல, மனிதநேயம், ஆன்மீகம் மற்றும் வாழ்க்கை தத்துவங்கள் பற்றிய விஷயங்கள் இவை அனைத்தும் எனக்கு வாழ்க்கையைப் பற்றிய புதிய புரிதலையும், புதிய பரிமாணத்தையும் கொடுத்துள்ளது இது என் வாழ்க்கையில் கிடைத்த பெரும் பாக்கியம். இத்தகைய மகத்தான வெற்றியை என்னை அனுபவிக்கச் செய்து, ஒவ்வொரு நொடியும் உயிர்ப்பிக்கச்செய்த சன் பிக்சர்ஸ் சேர்மன் திரு.கலாநிதி மாறன் சார் மற்றும் ஜெயிலரின் ஒட்டுமொத்தயூனிட்டுக்கும்எனதுநெஞ்சார்ந்தநன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன். வசந்த் ரவி பதிவு எனது கடின உழைப்பை மிகவும் பாராட்டிய பத்திரிகைகள், பத்திரிகையாளர்கள்மற்றும்சமூகஊடகங்கள், யூடியூபர்கள், மீம்கிரியேட்டர்களுக்கும் உள்ளம் கனிந்த நன்றி. எனது திறமையை சிறப்பாக வெளிப்படுத்துவேன் என்ற வலுவான நம்பிக்கையுடன் என்னுடன் நின்ற எனது குடும்பத்தினருக்கும், எனது ரசிகர்களுக்கும் நன்றி. வரவிருக்கும் ஆண்டுகளில் மிகுந்த பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் சிறந்த படங்களை தேர்ந்தெடுத்து கொடுப்பேன் என்பதை தெரிவித்துக் கொண்டு .... விரைவில் உங்கள் அனைவரையும் திரையரங்குகளில் சந்திக்க காத்திருக்கிறேன்! என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஆணவமாக பணத்தை வேண்டாம் என்று சொல்லவில்லை ராகவா லாரன்ஸ்

நடிகர் ராகவா லாரன்ஸ் 'சந்திரமுகி 2' திரைப்படத்தில் நடித்துள்ளார். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார்.

இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி வரும் திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார். 'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது. நடிகர் ராகவா லாரன்ஸ் நடிப்பதோடு மட்டுமல்லாமல் அறக்கட்டளை நடத்தி அதன் மூலம் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தும் வருகிறார். இவர் சமீபத்தில் என் அறக்கட்டளைக்கு யாரும் பணம் கொடுக்க வேண்டாம் என்று கூறியிருந்தார். இந்நிலையில், இது குறித்து வீடியோ ஒன்றை தனது சமூக வலைதளப்



பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில், "சிறிது நாட்களுக்கு முன்பு என் அறக்கட்டளைக்கு யாரும் பணம் கொடுக்க வேண்டாம் என்று ஒரு வீடியோ வெளியிட்டிருந்தேன். அதற்கு காரணம் நான் டான்ஸ் மாஸ்டராக இருக்கும் போது அறக்கட்டளை ஆரம்பித்தேன் 60 குழந்தைகளை வீட்டில் வளர்ப்பது, மாற்று திறனாளிகளுக்கு டான்ஸ் சொல்லி கொடுப்பது என்று செய்து வந்தேன். அப்போது என்னால் அதை பண்ண முடியவில்லை அதனால் மற்றவர்களின் உதவிகளை கேட்டிருந்தேன். ஆனால், இப்போது ஹீரோவாகிவிட்டேன் ஒரு வருடத்திற்கு மூன்று படங்கள் நடிக்கிறேன் நல்ல பணம் வருகிறது. எனக்குள்ளே ஒரு கேள்வி இருந்தது உனக்கு நல்லாதானே பணம் வருகிறது ஏன் மற்றவர்களிடம் வாங்கி செய்ய வேண்டும் நீயே செய்யலாமே என்று. ஆணவமாக பணத்தை வேண்டாம் என்று கூறவில்லை. எனக்கு கொடுக்கும் பணத்தை உங்கள் வீட்டு பக்கத்தில் இருக்கும் கஷ்டப்படும் அறக்கட்டளைக்கு கொடுங்கள். உங்கள் கையால் இது போன்று செய்யும் போது அதில் கிடைக்கும் சந்தோஷமே தனி" என்று பேசினார்.

## ஆதரவற்ற முதியவர்களுடன் பிறந்த நாள் கொண்டாடிய நடிகர் விஷால்

'மார்க் ஆண்டனி' திரைப்படம் செப்டம்பர் 15ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. விஷால் இன்று தனது பிறந்த நாளை கொண்டாடி வருகிறார்.

செல்லமே படத்தின் மூலம் திரையுலகிற்கு கதாநாயகனாக அறிமுகமானவர் விஷால். அதன்பின்னர் சண்டக்கோழி, திமிரு, சத்யம், அவன் இவன், தாமிரபரணி, துப்பறிவாளன் உள்ளிட்ட பல படங்களில் நடித்து முன்னணி நடிகராக வலம் வருகிறார். இவர் நடித்துள்ள 'மார்க் ஆண்டனி' திரைப்படம் செப்டம்பர் 15ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. ஆதரவற்ற முதியவர்களுடன் பிறந்தநாள் கொண்டாடிய விஷால் இதையடுத்து நடிகர் விஷால் இன்று தனது 45வது பிறந்தநாளை கொ ண்டாடி வருகிறார். இவருக்கு திரைப்பிரப லங்கள் மற்றும் ரசிகர்கள் என பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், நடிகர் விஷால் தனது பிறந்த நாளை ஆதரவற்ற முதியோர்களுடன் கொண்டாடியுள்ளார். பின்னர் பத்திரிகையாளர்களை சந்தித்த அவர், "பெரியவர்கள் வாழ்த்தும் போது கடவுள் நேரில் வந்து வாழ்த்துவது போன்று இருக்கிறது. எங்கள் அறக்கட்டளை சார்பாக முடிந்த உதவிகளை அவர்களுக்கு செய்து வருகிறோம்" என்று பேசினார்.





## கோலியை சீண்டி விடாதீர்கள் எதிரணி பந்து வீச்சாளர்களுக்கு தெ.ஆ. முன்னாள் வீரர் எச்சரிக்கை

இந்தியாவில் அக்டோபர் மாதம் 5ந் தேதி உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெற உள்ளது. சொந்த மண்ணில் நடைபெறும் உலகக் கோப்பையில் இந்திய அணி கோப்பையை வெல்லும் என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் விராட் கோலியை ஸ்லெட்ஜிங் செய்யாமல் இருப்பதே எதிரணி பந்து வீச்சாளர்களுக்கு நல்லது என முன்னாள் தென் ஆப்பிரிக்கா ஜாம்பவான் மக்காயா நிடினி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:

ஒரு பவுலராக விராட் கோலியை பற்றி உங்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவெனில் அவரை திட்டி விடாதீர்கள். பொதுவாகவே எந்த எதிரணி வீரராவது நம்மை சீண்ட மாட்டார்களா அதனால் நாம் வெறித்தனமாக செயல்பட மாட்டோமா என்று அவர் பசியுடன் காத்திருப்பார்.

ஏனெனில் எதிரணியினர் தம்மை சீண்டாமல் இருந்தால் அது தான் அவருக்கு கடுப்பாக இருக்கும்.

எனவே அவரை ஸ்லெட்ஜிங் செய்யாதீர்கள். அப்படி செய்தால் அதற்கான தண்டனையை நீங்கள் அனுபவிப்பீர்கள். மாறாக ஸ்லெட்ஜிங் செய்யாமல் விட்டால் அவரே அலுப்பு தட்டி தவறு செய்வார்.

குறிப்பாக தென் ஆப்பிரிக்க பவுலர்களுக்கு நான் மீண்டும் சொல்கிறேன் அவரை ஸ்லெட்ஜிங் செய்யாதீர்கள். ஏனெனில் நீங்கள் ஸ்லெட்ஜிங் செய்யும் போது அவர் இன்னும் உத்வேகமடைந்து அபாரமாக செயல்படுவார். எனவே அவருக்கு எதிராக அமைதியாக இருங்கள். மற்ற பேட்ஸ்மேன்களை வம்பிழுப்பது போல அவரிடம் நீங்கள் எதையும் செய்யாதீர்கள். மாறாக அமைதியாக இருந்து அவருக்கு அலுப்பு தட்டுவதைப் போன்ற உணர்வை ஏற்படுத்துங்கள். அதுவே அவரை நீங்கள் அவுட் செய்வதற்கான சிறந்த வழியாகும் இவ்வாறு அவர் கூறினார்.

## அழுத்தம் எனக்கு பிடிக்கும் சர்வதேச போட்டியில் அறிமுகமாகும் பேபி ஏபிடி

தென் ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியா அணிகள் மோதும் முதல் டி20 போட்டி நாளை நடக்கிறது. ஏபிடி வில்லியர்ஸ் ஜெர்சி நம்பரையே இவரும் அணிந்துள்ளார்.

ஆஸ்திரேலியா அணி தென்னாப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஒருநாள் மற்றும் 3 டி20 தொடரில் விளையாட உள்ளது. முதலில் டி20 தொடர் நாளை தொடங்குகிறது. இந்நிலையில் சர்வதேச போட்டியில் தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த டேவால்ட் ப்ரேவிஸ் அறிமுகமாக உள்ளார் என்ற தகவல் வெளியாகி உள்ளது. 20 வயதான டேவால்ட் ப்ரேவிஸ், ஓய்வு பெற்ற தென் ஆப்பிரிக்க நட்சத்திரமான ஏபி டி வில்லியர்ஸ் மாதிரி விளையாடுவதால் 'பேபி ஏபி' என்று அழைக்கப்பட்டார். ஏபிடி வில்லியர்ஸ் ஜெர்சி நம்பரையே இவரும் அணிந்துள்ளார்.

மேலும் பெரிய சிக்சர்களை அடிக்கும் திறனைக்



கொண்டுள்ளார். குறிப்பாக மிட்விக்கெட் மற்றும் லாங் ஆன் இடையேயான பகுதியில் அதிகமாக ரன்களை அடிக்ககுடியவர். டேவால்ட் ப்ரேவிஸ் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடருக்கான 18 பேர் கொண்ட அணியில் ஒரு பகுதியாக உள்ளார். ஆனால் உலகக் கோப்பைக்கு 15 வீரர்கள் மட்டுமே செல்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சர்வதேச போட்டியில் அறிமுகமாகஉள்ளநிலையில்அழுத்தம்எனக்கும்பிடிக்கும் என ப்ரேவிஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது: "எதிர்பார்ப்புகள் எப்போதும் இருக்கும் என்று எனக்குத் தெரியும்," அழுத்தம் எப்போதும் இருக்கும். நான் அழுத்தத்தை உணர்கிறேன். ஆனால் நான் அதை விரும்புகிறேன். மக்கள் என்னை டெவால்ட் ப்ரீவிஸ் என்று தெரிந்துகொள்ளவும், என்னுடைய விஷயங்களை நான் எப்படிப் பார்க்கிறேன் என்பதைப் பார்க்கவும் விரும்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.



## இந்திய அணியில் இணைந்த ரிஷப் பண்ட் வைரலாகும் வீடியோ

பயிற்சி முகாம் பெங்களூரு அருகே உள்ள ஆலூரில் நடைபெற்று வருகிறது. பயிற்சியில் ஈடுபட்டிருந்த இந்திய கிரிக்கெட் அணி வீரர்களை திடீரென ரிஷப் பண்ட் சந்தித்தார். மேலும் படிக்க ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி நாளை முதல் செப்டம்பர் 17ந்தேதி வரை இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடக்கிறது. இதில் பங்கேற்கும் ரோகித் சர்மா ஷர்மா தலைமையிலான 18 பேர் கொண்ட இந்திய அணி சில தினங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. ஆசிய கோப்பை போட்டிக்கு சிறந்த முறையில் தயாராகுவதற்காக இந்திய வீரர்களுக்கு 6 நாள் பயிற்சி முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி முகாம் பெங்களூரு அருகே உள்ள ஆலூரில் நடைபெற்று வருகிறது. கேப்டன் ரோகித் சர்மா, விராட் கோலி, காயத்தில் இருந்து மீண்டுள்ள ஸ்ரேயாஸ் அய்யர், லோகேஷ் ராகுல், ஹர்திக் பாண்ட்யா உள்ளிட்டோர் முகாமில் பங்கேற்றுள்ளனர். இந்நிலையில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இந்திய கிரிக்கெட் அணி வீரர்களை திடீரென ரிஷப் பண்ட் சந்தித்தார். பந்த் அணி வீரர்களுடன் மீண்டும் இணைவதையும், தலைமை பயிற்சியாளர் ராகுல் டிராவிட்டுடன் தொடர்புகொள்ளும் வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

## ஆசிய கோப்பை: முதல் 2 போட்டிகளில் கேஎல் ராகுல் விளையாட மாட்டார் ராகுல் டிராவிட்

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை உள்ளிட்ட 6 அணிகள் பங்கேற்கும் ஆசிய கோப்பை தொடர் நாளை தொடங்குகிறது. இந்த தொடரின் தொடக்க ஆட்டத்தில் பாகிஸ்தான் நேபாளம் அணிகள் மோதுகின்றன. இந்த போட்டி பாகிஸ்தானில் நடக்கிறது. இந்தியஅணிமுதல்போட்டியில் பாகிஸ்தானை எதிர் கொள்கிறது. இந்த போட்டி 2ந் தேதி இலங்கையில் நடக்கிறது.



வரும் அக்டோபர் மாதம் இந்தியாவில் உலகக்கோப்பை தொடர் நடைபெற உள்ளது. அந்த உலகக்கோப்பை தொடருக்கு சிறப்பாக தயாராகும் பொருட்டு ஆசிய அணிகள் இந்த ஆசிய கோப்பை தொடரை சிறப்பாக பயன்படுத்தி கொள்ளும். இந்நிலையில் ஆசிய கோப்பைக்கான முதல் 2 போட்டியில் கேஎல் ராகுல் விளையாடமாட்டார் என இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியிருப்பதாவது: கேஎல் ராகுல் மிகவும் நன்றாக முன்னேறி வருகிறார். ஆனால் ஆசிய கோப்பையின் முதல் இரண்டு போட்டிகளான பாகிஸ்தான் மற்றும் நேபாளத்திற்கு எதிராக அவர் விளையாடமாட்டார். இவ்வாறு அவர் கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.